திரு. வெ. ஏழுமலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ராஜா தொழிற்பயிற்சி நிலையத்தில் ஓட்டுநர் பயிற்சி, மேல்நிலைப் பள்ளி, முதியோர் இல்லம், ஆசிரியர் பயிற்சி என்று பல பயிற்சிகள் அளிக்கப்படுவதாக விளம்பரங்கள் வரப்பெற்றிருக்கின்றன. அதில் பயில்கின்றவர்களுக்கு உரிய முறையில் சான்றிதழ் வழங்கப்படுகின்றதா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசினுடைய அங்கீகாரம் பெற்று, பயிற்சி அளிக்கப்படுமானால், நிச்சயமாக அதற்குரிய சான்றிதழ்கள் அரசின் சார்பில், துறையின் சார்பில் வழங்கப்படும். அப்படி அங்கீகாரம் இல்லாத பயிற்சிகளுக்கு, அரசு அனுமதிக்காத பயிற்சிகளுக்கு சான்றிதழ்கள் நிச்சயமாக வழங்கப்பட மாட்டாது. அந்தப் பயிற்சி நிலையத்தில் அப்படி ஏதாவது தவறு இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்குரிய மனுவை அளித்தால், அரசு அதற்குரிய மேல் நடவடிக்கையை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 385, திரு. கே. கே. சிவசாமி, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

385—

குடும்ப அட்டை வழங்குதல்

•27786—திரு. கே.கே. சிவசாமி:

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், மேலப்பாறைக்குளம் பகுதி மக்களுக்குக் குடும்ப அட்டை வழங்க அரசு ஆவன செய்யுமா?

2003 மே 5]

மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

அருப்புக்கோட்டை தொகுதி, மேலப்பாறைக்குளம் கிராமத்தில் 135 குடும்பத்தினர்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு உள்ளன. மற்ற குடும்பங்களிலிருந்து குடும்ப அட்டைகள் வழங்கும்படி எந்த விதமான கோரிக்கையும் வரப்பெறவில்லை என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே.கே. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், கே. செட்டிகுளம் ஊராட்சியைச் சேர்ந்த மேலப்பாறைக்குளம் கிராமத்தில் சுமார் 50 குடும்பங்களுக்கு மேல் வெளி மாவட்டங்களுக்கு, வெளி மாநிலங்களுக்கு பிழைப்பு தேடிச் சென்று விட்டு, திரும்பவும் தங்கள் சொந்தக் கிராமங்களுக்குத் திரும்பி உள்ளனர். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், இப்பகுதி மக்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைப் பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், மேலப்பாறைக்குளம் பகுதி கிராமத்திலுள்ள 170 குடும்பங்களில் 8-11-2002 வரை 135 குடும்பங்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன. மற்ற குடும்பங்களிலே இருக்கிறவர்கள் இதுநாள் வரை வேண்டுகோளை வைக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வெளியிலே சென்றவர்கள் வந்திருப்பதாகச் சொல்லி இருப்பதன்பேரில், அந்த 35 குடும்பங்களும் முறையாக விண்ணப்பம் செய்வார்களேயானால், அந்தக் குடும்பங்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்குவதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. டி. மணி.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்சுழியிலே குடும்ப அட்டைகள் வழங்குவது சம்பந்தமாக மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு

தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், நம்முடைய மாநிலத்தினுடைய பல்வேறு பகுதிகளில் புதிதாகக் குடும்ப அட்டைக்கு மனு செய்கின்றபோது, அரிசி வேண்டாம் என்று எழுதிக் கொடுங்கள் என்று அதிகாரிகள் ஒரு நிபந்தனை வைக்கின்றார்கள். மாநில அரசு அப்படி ஏதாவது ஒரு வழிகாட்டுதல் சொல்லி இருக்கிறதா? அப்படி இருந்தால், அதைத் திரும்ப பெற்று அரிசி கிடைப்பதற்கு வழிவகை செய்யக்கூடிய அளவிலே அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எந்தவிதமான நிபந்தனையும் விதிக்கவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அரிசி வேண்டாம் என்று கூறினால்தான் குடும்ப அட்டைகள் வழங்கப்படும் என்ற நிலையில்லை. யாருக்கு வேண்டுமானாலும், குடும்ப அட்டைகள் தேவைப்படுகிறவர்களுக்கு இப்போது இந்த அரசு குடும்ப அட்டைகள் தந்து கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 386, திரு. எம். சக்திவேல் முருகன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

386—

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல்

***9095—திரு. எம். சக்திவேல் முருகன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் பேரூராட்சி 21 வார்டுகளில் 14 வார்டுகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்காமல் நேரடி நீர் வழங்குவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஊர்க்காடு குடிநீர்த் திட்டம் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் உள்ளதா?